# எம்.ஆர்.டி சுங்கை பூலோ - காஜாங் சேவையால்
## பயணிக்கும் கார்களின் எண்ணிக்கையில் 160,000 குறையும்



கோலாலம்பூர், டிச.13-

சுங்கை பூலோவிருந்து காஜாங் வரை நிர்மாணிக்கப்படும் எம்.ஆர்.டி ரயில் திட்டம் நிறைவடைந்ததும் கிள்ளான் பள்ளத்தாக்கு சாலைகளில் பயணிக்கும் கார்களின் எண்ணிக்கையில் 160,000 குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்தாண்டு ஜூலை மாதம் முழுமைபெறும் இந்த எம்.ஆர்.டி சேவையை தினந்தோறும் 4 லட்சம் பயணிகள் பயன்படுத்துவர் என்று மாஸ் ரெபிட் டிரான்ஸிட் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் வியூகத் தொடர்பு பிரிவு இயக்குனர் நிஜ்முடின் அப்துல்லா கூறினார்.

பொது மக்கள் அதிகம் புழங்கும் இடங்களில் இந்த எம்.ஆர்.டி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் அதிகமானோர் இச்சேவையால் பயனடைவர் என்று அவர் சொன்னார்.

கோத்தா டாமன்சாரா, முத்தியாரா டாமன்சாரா, பண்டார் உத்தாமா, தாமான் துன் டாக்டர் இஸ்மாயில், பிலியோ டாமன்சாரா, செமந்தான், புக்கிட் டுகுங், பத்து செபெலாஸ் செராஸ், பண்டார் துன் ஹூசேன் ஒன், தாமான் சன்டெக்ஸ் ஆகிய இடங்கள் உட்பட மக்கள் நெரிசல் மிக்க இடங்களில் இந்த ரயில் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன என்றார் அவர்.

இந்த பகுதிகளில் பெரும்பாலானவற்றில் இதுவரை ரயில் சேவைகள் இருந்ததில்லை. இந்நிலையங்களில் கார் நிறுத்துமிடங்களும் அமைக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்காமல் நகரங்களுக்கிடையிலான பயணங்களை மேற்கொள்ள இது ஒரு சிறந்த போக்குவரத்து முறையாக இருக்கும் என்றும் நிஜ்முடின் அப்துல்லா வலியுறுத்தினார்.